எம்.சி.ஓ.பி.133/2015 காஞ்சனா 24.03.2021

கு.வி.

விபத்து நடந்து ஒரு வாரம் கழித்து தான் காவல்நிலையத்தில் புகார் கொடுத்தேன் என்றால் சரிதான். நான் விபத்து நடந்த பிறகு கோயமுத்தூர் கங்கா மருத்துவமனையில் சிகிச்சையில் இருந்தேன். நான் மயக்கத்தில் இருந்ததால் என் கணவர் காவல்நிலையத்தில் புகார் கொடுத்தார். நான் மாயனூர் ரயில்வே கேட் அருகில் வடக்கமாக செல்லும்போது கரூரிலிருந்து திருச்சி நோக்கி சென்ற இருசக்கர வாகனம் எங்கள் மீது மோதிவிட்டது. மோதிய இருசக்கர வாகனம் நின்றதா என்றால் நான் மயக்கத்தில் இருந்ததால் எனக்கு தெரியவில்லை. விபத்திற்கு காரணம் 1ம் எதிர்மனுதாரர் இல்லை என்றும் அடையாளம் தெரியாத வாகனம்தான் என்று சொன்னால் என் கணவரும் குறுக்கே சென்றுவிட்டார். 1ம் எதிர்மனுதாரர் வாகனம் சரியாகதான் வாகனத்தை ஓட்டிச்சென்றார் என்றும், அடையாளம் தெரியாத வாகனத்தில் மீது தான் தவறு என்றால் 2 வாகனத்தின் மீதும் தவறுதான். முதல் தகவல் அறிக்கை அடையாளம் தெரியாத வாகனத்தின் மீது தான் பதிவு செய்யப்பட்டுள்ளது என்றால் சரிதான். விபத்தை நேரில் பார்த்த சாட்சிகள் உள்ளதா என்றால் நிறைய கும்பலாக இருந்ததால் எனக்கு தெரியவில்லை. விபத்து தார் ரோட்டின் வடபுற பகுதியில் நடந்தது என்றால் சரிதான். போலீசார் தயார் செய்த மாதிரி வரைபடத்தை தாக்கல் செய்தேனா என்றால் இல்லை. விபத்திற்கு பிறகு முதலில் கரூர் கே.ஜி மருத்துவமனையிலும், பிறகு கோவை கங்கா மருத்துவமனையிலும் சேர்ந்தேன். நான் கரூர் மருத்துவமனையில் 4, 5 நாட்கள் இருந்தேன். 4, 5 நாட்கள் சிகிச்சையில் இருந்ததாக பொய்யாக சொல்லுகிறேன் என்றால் சரியல்ல. கோயமுத்தூர் கங்கா மருத்துவமனையிலும் 5 நாட்கள் இருந்தேன். கங்கா மருத்துவமனையிலும் 5 நாட்கள் இருந்ததாக பொய்யாக சொல்லுகிறேன் என்றால் சரியல்ல- மருந்து பில்களும் வழக்கிற்காக பொய்யாக சொல்லுகிறேன் என்றால் சரியல்ல. எனக்கு காயங்கள் ஆறி நல்ல நிலையில் உள்ளேன் என்றால் சரியல்ல. எனது வலது கால் சுண்டு விரல் எடுக்கப்பட்டது. மற்றும் 2வது விரலில் பாதி துண்டிக்கப்பட்டுள்ளது. எனக்கு விபத்தினால் வருமான இழப்பு ஏற்படவில்லை என்றால் சரியல்ல. வயது, வருமானம், தொழில் ஆகியவற்றை நிரூபிக்கும் ஆவணங்கள் தாக்கல் செய்துள்ளேன். 1ம் எதிர்மனுதாரர் வாகனத்தின் ஆவணங்களை தாக்கல் செய்துள்ளேன். 1ம் எதிர்மனுதாரர் மீது எந்த தவறும் இல்லை என்றும், 2ம் எதிர்மனுதாரர் தான் இழப்பீடு கொடுக்கவேண்டுமென்றால் சரியல்ல. நான் கேட்டுள்ள இழப்பீடு கிடைக்கத்தக்கதல்ல என்று சொன்னால் சரியல்ல.

ஒம்/காஞ்சனா,

ஒம்/C.ஸ்ரீதர்,

சார்பு நீதிபதி,

குளித்தலை.